# பால் விநியோக வழித்தடம் - டெண்டர் நிபந்தனைகள்

## காலம் 2022 – 2023

1. ஒப்பந்தக் காலம் ஒப்பந்தப்பணி மேற்கொள்வதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து ஓராண்டு காலம் ஆகும். ஒப்பந்தக் காலம் முடிவுற்று, அடுத்த வாகன ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை அல்லது ஆறு மாதங்கள் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

2. இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட வண்டியை வேறு எந்த ஒப்பந்தப்புள்ளியிலும் சேர்க்கக் கூடாது. ஒரு ஆர்.சி.புத்தகம் வைத்து ஒரே ஒரு பால் வழித்தடத்திற்கு மட்டும் டெண்டர் கோர வேண்டும். ஒரு ஆர்.சி புத்தகத்தை வைத்து ஒன்றுக்கு மேற்பட்ட பால் வழித்தடங்களுக்கு டெண்டர் கோரினால் டெண்டரிலிருந்து நீக்கப்படுவார் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

3. டெண்டர் ஒப்புக் கொள்ளப்பட்ட டெண்டாதாரர் ஒரு வாரத்திற்குள் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் கணக்கு ஆரம்பித்து அதற்கான கணக்கு எண்ணையும் வருமான வரிக்கு PAN எண்ணையும் பொது மேலாளர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை வங்கி காசோலை மூலம் வாடகை கட்டணம் பெற்றுக் கொள்ள சம்மதிக்கிறேன்.

4. ஒப்பந்ததாரர், அவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்பு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டமைக்கு அத்தாட்சியாக ரூ.100/- மதிப்பிற்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த விதிமுறைகளை தட்டச்சு செய்து, ஒவ்வொரு தாளிலும் ஒப்பம் இட்டு இவ்வொன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தப் பத்திரம் வழங்கிய பின்னரே முதல் போக்குவரத்து கட்டணம் வழங்கப்படும் என சம்மதிக்கிறேன்.

5. பால் மற்றும் பால் உபபொருட்கள் விநியோகம் செய்யும் வாகனம் முழுவதும் இன்சுலேட்டட் செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஒப்புக் கொள்கிறேன்.

6. ஒவ்வொரு வண்டிக்கும் அதற்கு டெண்டரில் கோரப்பட்ட கொள்ளளவு வரை பால் டப்புகள் மற்றும் ஒன்றியத்தில் அனுப்பப்படும் பால் உபபொருட்களை ஏற்றிச் செல்ல வேண்டும் ஒப்புக் கொள்கிறேன்.

7. நிர்ணயிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் ஒன்றியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி ஒரு கிலோ மீட்டருக்குரிய வாடகை தொகைக்கு / நாள் வாடகை தொகைக்கு ஒப்பந்தக் காலம் முடியும் அல்லது மறு ஒப்பந்தம் முடியும் நாள் வரையிலும் வண்டியை ஓட்ட சம்மதிக்கிறேன்.

8. இவ்வலுவலகத்திலிருந்து இயக்கும் வழித்தட வாகனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி குறித்த நேரத்தில் பால் பாக்கெட்டுகள் ஏற்றி முகவர்கள், அரசு நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் அரசு துறை சாராத நிறுவனங்களுக்கும் பாய்ண்டில் டெலிவரி கொடுத்து ஒன்றிய பால் விநியோக சிட்டாவில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் / கால தாமதம் ஏற்படின் ஒவ்வொரு வேளைகளுக்கும் ரூ.500/- அபராதம் விதிக்கப்பட எடுக்கும் நடவடிக்கைக்கும் சம்மதம் தெரிவிக்கிறேன்.

9. மேலும், காலதாமதமாக பால் விநியோகம் செய்ததின் காரணமாக பால் கெட்டுப் போகுமாயின் கெட்டுப் போன பாலின் கிரயத் தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அன்றைய பால் விற்பனை விலையில் இரு மடங்காக வாடகை பணத்தில் பிடித்தம் செய்ய சம்மதிக்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கையொப்பம்**

10. பால் பண்ணையிலிருந்து பால் டப்புகள் மற்றும் காலி டப்புகளை / கேன்களை வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தனது சொந்த செலவில் நபர்களை ஒப்பந்தக்காரர் நியமித்துக் கொள்ளவும், மேலும் பால் டப்புகள் / காலிக் கேன்கள் போன்றவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் கையாண்டு அதனை குறைவில்லாமல் திரும்பவும் பண்ணையில் ஒப்படைக்க சம்மதிக்கிறேன். அதில் எதுவும் குறைவு ஏற்படின் அதற்கான கிரையத் தொகையை செலுத்த / வாடகை பில்லில் பிடித்தம் செய்ய சம்மதிக்கிறேன்.

11. ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த வண்டி பழுது ஏற்படும் நேரத்தில் ஒன்றிய அனுமதியுடன் மாற்று வண்டி ஏற்பாடு செய்து பால் விநியோகம் குறித்த நேரத்தில் செய்ய வேண்டும். அவ்வாறு ஏற்பாடு செய்து ஆட்களை வைத்து வாகனம் ஓட்டும் போது அதில் ஏற்படும் இழப்புகளுக்கு டெண்டாதாரரே பொறுப்பாவார். மேற்படி நேரத்தில் ஒப்பந்தக்காரர் கண்டிப்பாக ஒன்றியத்திற்கு வந்து ஏற்பாடு செய்யப்பட வேண்டும். தவறின் கூடுதல் செலவுத் தொகையுடன் ரூ.500/- முதல் ரூ.1000/- வரை அபராதம் விதிக்கவும் அல்லது ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என ஒப்புக் கொள்கிறேன்.

12. டெண்டரில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள், தனியார் பால் பண்ணையில் பால் சேகரம் செய்வதோ அல்லது தனியாரிடம் பால் விற்பனை செய்வது தெரிய வந்தாலோ டெண்டரில் கலந்து கொள்வது நீக்கப்படுவதுடன் இந்த ஆண்டிற்கு வழங்கப்பட்ட உத்தரவு ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரமும் உண்டு. மேலும் அபராதம் விதிக்கவும் பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு ஒப்புக் கொள்கிறேன்.

13. டெண்டர்தாரருக்கு ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும் போது ஒன்றிய நிர்வாகக்குழுவின் முடிவின்படி ஒப்பந்தக்காலத்தில் அனுமதிக்கப்பட்ட வாடகை விகிதத்தை உயர்த்தவோ, குறைக்கவோ அல்லது தொடர்ந்து வழங்கவோ பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு. இது ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாளில் உள்ள டீசல் விலை அடிப்படையில் ஒப்பந்த கட்டணத்தில் உயர்வு / குறைவு ஏற்படுத்தப்படும் ஒப்புக் கொள்கிறேன்.

14. வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்துடன் டெண்டர்தாரர் டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார் என ஒப்புக் கொள்கிறேன்.

15. பால் வண்டியாவும், ஒரே நாளில், ஒரே வண்ணத்துடன் இவ்வொன்றிய அறிவுரைகளின்படி பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும். டெண்டர் வண்டிகளில் பக்கவாட்டில் மற்றும் முகப்பில் “ஆவின் பால்” என்று ஆவின் Logo – வுடன் பெயிண்டால் எழுதியிருக்க வேண்டும். இத்துடன் ஆவின் பால் பொருட்கள் விளம்பரமும் எழுதியிருக்க வேண்டும் ஒப்புக் கொள்கிறேன்.

16. டெண்டர் ஒப்புக் கொள்ளப்பட்டு அது முடிவுறும் கால வரையிலோ அல்லது மறு டெண்டர் விடப்பட்டு ஆணைப் பிறப்பிக்கும் காலம் வரையிலோ, டெண்டர் விதிகளுக்குப் புறம்பாக நடந்து டெண்டர் ரத்து செய்யப்பட்டலோ அல்லது டெண்டர்தாரரே வண்டியை நிறுத்திக் கொண்டாலோ அவரின் காப்புத் தொகையை இழப்பதோடு டெண்டர்தாரர் எந்த ஆவின் நிறுவனங்களிலும் டெண்டரில் கலந்து கொள்ள அருகதை அற்றவர் என முடிவு செய்யப்படும் என ஒப்புக் கொள்கிறேன்.

17. ஒப்பந்தக் காலத்தில் பால் விநியோக வழித்தடத்தினை மாற்றி அமைக்கவோ, வழித்தடத்தில் தூரத்தை கூட்டவோ, குறைக்கவோ இவ்வொன்றியத்திற்கு முழு உரிமை உண்டு. மாறுதல் குறித்து விபரம் கிடைத்தவுடன் ஆணைக்கிணங்க ஒப்பந்தக்காரர் செயல்பட வேண்டும் என ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கையொப்பம்**

18. பால் வழித்தடங்களில் ஒன்றியத்திலிருந்து அனுப்பப்படும் தளவாடங்கள், இயந்திர சாமான்கள், பால் பொருட்கள் மற்றும் காசோலைகள் போன்றவற்றை காலை.·. மாலை இருவேளைகளிலும், ஒன்றியத்திலிருந்து எடுத்துச் சென்று குறிப்பிட்ட இடத்தில் ஒப்படைக்க வேண்டும். அதே போன்று ஏஜென்டுகள், நிறுவனங்களிலிருந்து பாங்க் செலான், செக்குகள், தபால்களை பெற்று ஒன்றியத்தில் உரிய அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். இவற்றிற்கு தனிக் கட்டணம் ஏதும் கொடுக்கப்பட மாட்டாது. மேற்படி பொருட்களை வண்டியில் எடுத்துச் செல்லும் போது ஏதாவது சேதம் ஏற்படுமாயின் அதற்குரிய தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும் என ஒப்புக் கொள்கிறேன்.

19. ஒரே டெண்டர்தாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தடங்களில் ஒப்பந்தக்காரர்களாக ஏற்கப்பட்டு பால் வழித்தடத்திலோ அல்லது பால் பாக்கெட் ஏற்றிச் செல்லும் தடத்திலோ, வண்டி ஓட்டும் காலத்தில் எத்தடத்திலாவது இழப்புகள் ஏற்படுமாயின் அத்தடத்தில் ஈடுகட்ட இயலாத நிலையில் மற்றைய இடங்களில் வாடகை மற்றும் பொறுப்புத் தொகைகளை ஈடு செய்ய நிர்வாக பொது மேலாளர் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

20. ஒன்றியம் கொடுக்கும் பாலின் அளவு, தரம் ஆகியவைகள், பூத்துகள் மற்றும் நிறுவனங்களை சென்றடையும் போது அதற்கு இடைப்பட்ட நேரத்தில் பாலுக்கு ஏற்படும் அளவு, தரம் குறைவு ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரரே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பால் வழித்தடத்திற்கு உட்பட்ட டெண்டர் காலம் முழுவதற்கும், அவரே முழுப் பொறுப்பாவார் என்று நிர்ணயிக்கப்பட்டு அதற்குண்டான முழுக் கட்டணத் தொகையையும் அவரிடம் வசூலிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

21. வேலை நிறுத்தம், பந்ந் காலம், வெள்ளம் போன்றவற்றால் போக்குவரத்து தடைப்பட்டாலும், பெருங் காற்றினால் மரங்கள் விழுந்து சாலைப் போக்குவரத்து தடைப்பட்டாலும், பால் விநியோகத்திற்கு மாற்று வழிகளை கடைப்பிடிக்க தம்முடைய சொந்தப் பொறுப்பில் பால் விநியோகம் செய்து வர வேண்டியது ஒப்பந்தக்காரரின் கடமையாகும். இதில் ஏற்படும் தடங்கள் மற்றும் இதனால் உண்டாகும் நஷ்டங்களும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

22. போக்குவரத்து சட்ட விதிகளுக்குட்பட்டு, வாகனத்தை பராமரிப்பது மற்றும் சரியாக ஓட்டுவது போன்றவை ஒப்பந்தக்காரரின் சொந்தப் பொறுப்பு ஆகும். மேற்கண்ட விதிகளில் ஏதேனும் ஒன்றில் தவறினாலும் ஒன்றியத்தை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. விதிகளை சரிவர கடைபிடிக்காமல் அதனால் வண்டி தாமதமாக சென்று பால் கெட்டு விட்டாலும் பாலின் கிடையத் தொகைக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என ஒப்புக் கொள்கிறேன்.

23. ஒவ்வொரு முறை பாலை ஏற்றி பூத்துக்கள் / நிறுவனங்களில் சேர்ந்த பின்னும் வண்டி சுத்தமாகக் கழுவப்பட்டு, நன்கு துடைக்கப்பட வேண்டும். தவறினால் ரூ.100/- அபராதம் விதிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

24. பால் வண்டி ஓட்டுனரோ, அல்லது கிளீனரோ சம்பந்தப்பட்ட நபரோ ஒன்றியத்தின் பாலை திருடவோ அல்லது திருட எத்தனித்தாலோ அல்லது தவறான வழியில் செலவிடவோ செய்தால் இது சம்மந்தமாக விசாரணைகள் மேற்கொண்டு ஒன்றியத்தினால் நிர்ணயிக்கப்படும் அபராதம் மற்றும் மற்ற சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கு ஒப்பந்தக்காரரே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

25. ஒன்றியத்தைச் சேர்ந்த ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த பொருட்களைத் தவிர பிற நபர்களோ, பொருட்களோ பால் வண்டியில் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றக் கூடாது. தவறினாலோ இது பற்றி தெரிய வந்தாலோ அன்றைய தினம் வாடகைப்பணம் கோரும் தகுதியை ஒப்பந்தக்காரர்

**ஒப்பந்ததாரர் கைபொய்ப்பம்**

இழக்க நேரிடும். மேலும் ஒன்றிய அலுவலர்களால் மேற்படி தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, ஊர்ஜிதம் செய்யப்பட்டால் அன்றைய வாடகை பணத்தை இழப்பதோடு டெண்டரை ரத்து செய்ய வேண்டிய நிலையும் ஏற்படும். மேலும் அபராதத் தொகை ரூ.500/- அல்லது ஒன்றியம் நிர்ணயிக்கிறபடி வசூலிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

26. ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ஏதாவது காரணங்களால் ரத்து செய்யப்பட்டால் அதற்கு நஷ்ட ஈடு மற்றும் ஈட்டுத் தொகை எதுவும் கோரவோ ஒப்பந்தக்காரராகிய எனக்கு உரிமை இல்லை என்பதனை முழு மனதுடன் ஒப்புக் கொள்கிறேன்.

27. பாதுகாப்பு வைப்புத் தொகையாக ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஒவ்வொரு தடத்திற்கும் தனித்தனியே செலுத்த வேண்டும். இத்தொகை ஒப்பந்த காலம் முடிந்து ஒன்றியத்திலிருந்து ஒப்பந்தக்காரருக்கான கணக்கை நேர் செய்தபின் ஒன்றியத்தின் நடைமுறை வழிகாட்டுதலின்படி பகுதியாகவோ / முழுமையாகவோ உறுதிமொழி பத்திரம் பெற்ற பின்னர் திருப்பித் தரப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

28. பால் விநியோகிப்பதற்கான வாடகைத் தொகை மாதம் ஒரு முறை அல்லது இரு முறை ஒன்றிய நிதிநிலையை அனுசரித்து வழங்கப்படும் கால தாமதம் ஏற்படின் தாமதத்திற்கான நட்ட ஈடு கோரும் உரிமை ஒப்பந்தக்காரருக்கு கிடையாது. மேலும் வாகனத்தை இயக்க மறுப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு உரிமை இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

29. ஒன்றியத்தில் செலுத்தியுள்ள காப்புத் தொகைகளுக்கு வட்டி எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

30. பால் வண்டி கிளீனர், பால் வண்டியின் பின்புறம் தான் அமர்ந்திருக்க வேண்டும். பால் டப்புகள் / கேன்கள் வண்டி ஓட்டும் போது சாய்ந்து விடாமல் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது இவரது பொறுப்பு. ஒன்றியத்தின் அலுவலர்கள் மற்றும் சிப்பந்தகளிடம் வண்டியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் நாகரீகமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும். தவறினால் அவர்களது நடத்தை சரியில்லையெனக் கருதி குறிப்பிட்ட நபர்களை பால் வண்டியில் செல்ல அனுமதிக்கக்கூடாது என உத்தரவிட ஒன்றியத்திற்கு உரிமை உண்டு. ஒன்றிய உத்தரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றி அமைக்க ஒப்பந்தக்காரர் தயாராக இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

31. பாதுகாப்பு வைப்புத் தொகையை விட அதிகமானத் தொகை ஒப்பந்தக்காரரிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அவற்றை ஈடுகட்ட ஒப்பந்தக்காரர் தயாராக இருக்க வேண்டும். அவ்வாறு இயலாத நேரத்தில் ஒப்பந்தக்காரரின் இதர சொத்துக்களிலிருந்து வசூல் செய்ய ஒன்றியத்திற்கு உரிமையுண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

32. சட்ட ரீதியான நடவடிக்கைகள் திருநெல்வேலி நகர எல்லைக்குட்பட்டது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

33. ஒப்பந்தக்காரர் தன் பெயரில் இல்லாத வாகனம் மூலம் பால் விநியோகம் செய்ய அனுமதியில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

34. பால் விநியோக வழித்தடத்தில் பிரச்சனைகள் இருக்கும் போது வாடகை பணம் வழங்கப்பட மாட்டாது. பிரச்சனைக்கு தீர்வு கண்ட பிறகே வாடகை பணம் அனுமதித்து வழங்கப்படும்.

35. ஒப்பந்தக்காரர் அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமானவரி, இதர வரிகள் வாடகை தொகையிலிருந்து பிடித்தம் செய்து இருசால் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கையொப்பம்**

36. ஒப்புக் கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் டெண்டர் நிபந்தனைகளை மீறும் போதும் ஒன்றியத்திற்கு திருப்திகரமானதாகவோ, சிக்கனமானதாகவோ இல்லையெனக் கருதினாலும் எந்தவித முகாந்திரமுமின்றி ஒன்றியத்தின் பொது மேலாளர் அவர்களால் டெண்டர் எந்த நேரத்திலும் ரத்து செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

37. ஒப்பந்தக் காலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒப்பந்த ஊர்தியினை டெண்டர்தாரர் திடீரென்று நிறுத்திக் கொண்டாலோ, அல்லது டெண்டாதாரர் பெயரில் இல்லாத மற்றவர்களின் வண்டிகளை உபயோகப்படுத்தினாலும், டெண்டர்தாரர் தனது காப்புத் தொகையை இழப்பதுடன் மறு டெண்டருக்கு ஆகும் செலவு மறு டெண்டர்தாரர் ஒப்புக் கொண்டு அப்பால் விநியோகத் தடத்திற்கு வாகனம் செலுத்தும் காலம் வரை டெண்டர் ரேட்டுக்கு மேலாகும் செலவுத் தொகைகளுக்கு பழைய டெண்டர்தாரரே பொறுப்பாகும். இந்நட்டம் இந்த டெண்டர்தாரரின் இதரச் சொத்துக்களிலிருந்து ஈடு செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

38. பால் வழித்தடங்களில் பாலை விநியோகிக்கவும், ஒப்படைக்கவும் முகவர்கள், அரசு நிறுவனங்கள், கல்லூரிகள், அரசு சாரா நிறுவனங்களுக்கு பால் இறக்குகிற நேரத்தை குறித்து பால் வழங்கியதற்கான அத்தாட்சியாக விநியோக சிட்டாவில் ஒப்புதல் கையெழுத்து பெற்று ஒன்றியத்தில் ஒப்படைப்பது டெண்டர்தாரரின் பொறுப்பாகும். தவறினால் ரூ.500/- வரை அபராதம் விதிக்கப்படும். மேலும் மேற்கண்டவர்களிடம் ஒப்படைக்காத பாலுக்கு இரு மடங்கு கியைத் தொகையை செலுத்தவும் ஒப்புக் கொள்கிறேன்.

39. ஏற்றுக் கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் டெண்டர் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் இருந்தால் டேவணித் தொகைளை பறிமுதல் செய்வதுடன் மறு டெண்டருக்கு ஆகும் செலவையும் அவர் ஏற்க வேண்டும். டெண்டரை பிறருக்கு விட்டுக் கொடுத்தாலோ டேவணித் தொகையை பறிமுதல் செய்வதுடன் மறு டெண்டருக்கு ஆகும் செலவையும் அவர் ஏற்க வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

40. சுங்கச் சாவடியில் வசூலிக்கப்படும் சுங்க வரிக்கு ஒப்பந்தக்காரராகிய நானே முழுப் பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

41. டெண்டர் காலம் முடிவடைந்த நாளில் இருந்து மறு டெண்டர் முடிவு செய்யப்படும் வரை ஒப்பந்தக் காலத்தை நீட்டிப்பதற்கு இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு. ஒப்பந்தக்காரர் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட கிலோ மீட்டருக்கு அதிகப்படாமல் வாகனம் ஓட்ட சம்மதிக்க வேண்டும் என்பதையம் ஒப்புக் கொள்கிறேன்.

42. டெண்டர் காலத்தில் பால் வழித்தடங்களில் மாற்றம் ஏற்பட்டு அதில் பாலை விநியோகத்திற்கு அனுப்ப ஒன்றியம் ஆணையிட்டால் பாலை விநியோகம் செய்ய ஒப்பந்தக்காரர் தயாராக இருக்க வேண்டும். இதில் தவறு நேரிடின் அவற்றிற்கான நஷ்டத்தை (தொகையை) வசூலிக்கவோ, தேவையானால் டெண்டரை ரத்து செய்யவோ பொது மேலாளர் அவர்களுக்கு முழு உரிமை உண்டு என ஒப்புக் கொள்கிறேன்.

43. ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒன்றியத்தின் தேவையைப் பொறுத்து மற்ற பால் வழித்தடங்களிலோ, ஒன்றியம் அவ்வப்போது ஆணையிடும் பொழுது வாகனம் இயக்க வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

44. ஒப்பந்தக்காரர் பால் வண்டி சம்மந்தமான ட்டிரிப் சீட்டுக்களையோ அல்லது அதற்கு சம்மந்தமான ஆதாரங்களையோ வைத்திருக்க வேண்டியது அவரது முழுப் பொறுப்பாகும். இது சம்மந்தமாக ஒன்றியத்திற்கு எந்தவித பொறுப்பும் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கைபொய்ப்பம்**

45. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தக் காலத்தில் தனியார் பால் பண்ணையை ஆதரிக்கவோ, அல்லது அதன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் காரியங்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபட்டாலோ அவரின் ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் டெபாசிட் தொகையை பறிமுதல் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

46. ஒப்பந்தம் செய்யப்பட்ட லாரி / மினி லாரி / வேன் ஆகியவைகளில் எந்தவித வண்டி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோ அதைத்தான் டெண்டர் காலம் முடியும் வரை பால் வழித்தடத்தில் ஓட்ட வேண்டும். தவிர்க்க முடியாத பட்சத்தில் ஒப்பந்தக்காரரின் கோரிக்கை பரிசீலித்து மாற்று வாகனம் இயக்கவோ / ரத்து செய்யவோ பொது மேலாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

47. ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒன்றிய பொது மேலாளரால் ஆணைப் பிறப்பிக்கப்பட்ட பின் ஒன்றியம் கொடுக்கும் காலக்கெடுவிற்குள் பத்திரங்கள் எழுதி கொடுக்காமல் வண்டியை நிறுத்திக் கொண்டாலும் அல்லது ஒத்துழைக்க மறுத்தாலும் அவர் மீது ஒப்பந்த ஒன்றிய விதிகளின்படி அவர் மேல் எந்தவித நடவடிக்கை எடுக்கவும் ஒன்றியத்திற்கு முழு உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

48. அவ்வப்போது ஒன்றிய பொது மேலாளர் அவர்களால் நிர்வகிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

49. ஒவ்வொரு டெண்டர் பாரத்திலும் ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) டெப்பாசித் தொகையாக செலுத்தப்பட வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

50. டெண்டரை அங்கீகரிக்கவோ, மறுக்கவோ ஒன்றிய பொது மேலாளர் அவர்களுக்கு முழு உரிமையுண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

51. வைப்புத் தொகைகள் தணிக்கை காலம் முடிவுற்று அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னரே அல்லது ஒன்றிய விதிமுறைகளின்படி திருப்பி வழங்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

52. வழித்தடத்தில் ஒப்பந்த வண்டியினைத் தவிர வேறு வண்டியினை அனுமதி பெறாமல் இரு தினங்களுக்கு மேல் ஓட்டினால் இரு தினங்களுக்கு மேல் உள்ள நாட்களில் ட்ரிப் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் வாடகை பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

53. ஒரு தடத்திற்கு ஓடும் வண்டியை மற்றொரு தடத்திற்கு அனுமதிக்க இயலாது. தவிர்க்க முடியாத காரணங்களினால் பொது மேலாளர் அனுமதியின்படி வாகனம் இயக்குவதற்கு அதிகாரம் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

54. நிர்வாகம் விரும்பினால் 15 நாட்களுக்கு முன் நோட்டீஸ் மூலம் அறிவிப்புக் கொடுத்து வழித்தடத்தினை முழுமையாக நிறுத்திக் கொள்ள ஒன்றியத்திற்கு முழு அதிகாரம் உள்ளது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

55. டெண்டர்தாரர் டெண்டர் வண்டியில் பணிபுரியும் டிரைவர் மற்றும் கிளீனர்களுக்கு அரசு விதிகளின்படி பிரதி மாதம் 7-ம் தேதிக்குள் தங்களுக்கு பொருந்தும் பட்சத்தில் சம்பளம் வழங்கிய விபரத்துடன் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழக சந்தா தொகையை செலுத்திய விபரங்களை குறிப்பிட்டு வாகன வாடகைப்பட்டியலும் இணைத்து ஒன்றியத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சந்தா தொகை பிரதி மாதம் 15-ந் தேதிக்குள் அந்தந்த நிறுவனங்களில் செலுத்தப்பட ஏதுவாக பட்டியல்களும் படிவங்களும் சமர்பிக்கப்பட வேண்டும். தேவைப்படின் சந்தா தொகைகள் வண்டி வாடகை தொகையில் பிடித்தம் செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனங்களில் செலுத்தப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கைபொய்ப்பம்**

56. தேர்வு பெற்ற விண்ணப்பதாரர் ஒன்றிய விதிகளின் படி ரூ.11/-(ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி அசோசியேட் உறுப்பினராக சேர வேண்டும். ஆனால் அவர்களுக்கு எந்த விதமான ஓட்டுரிமையோ அல்லது ஒன்றிய நிர்வாகத்தில் கலந்து கொள்ளவோ அல்லது லாப ஈவில் பங்கு பெறவோ உரிமையில்லை. இந்த டெண்டர் காலம் வரையிலும் அசோசியேட் உறுப்பினராக இருக்கலாம். இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஏதாவது பிரச்சனை இருந்தால் இது தொடர்பாக திருநெல்வேலி துணைப் பதிவாளர் (பால்பதம்) (பால்வளம் / வழக்குகள் ) நீதி மன்றத்தில் மட்டுமே முறையீடு செய்து கொள்ளலாம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

57. டெண்டரில் தேர்வு பெற்ற விண்ணப்பதாரர் தங்கள் சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் தங்கள் மாதிரிக் கையொப்பம் மற்றும் வீட்டு முகவரி அத்தாட்சியுடன் அதற்கான படிவத்தில் ஒன்றிய அலுவலர் முன்னிலையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

58. டெண்டர் கோருபவர்கள் தங்களுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை டெண்டர் படிவத்தில் ஒட்டி டெண்டர் கோருதல் வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

59. பால் விநியோகம் செய்யும் ஒவ்வொரு விநியோகப் புள்ளியிலும் பால் இறக்கிற நேரத்தை பால் விநியோகச் சிட்டாவில் குறிப்பிட்டு, முகவரிடம் / சங்கத்திடம் / நிறுவனத்திடம் போன்றோருடன் பால் விநியோகம் செய்ததற்கான கையெழுத்தை பெற்று ஒன்றியத்திடம் ஒப்படைக்க வேண்டும். தவறினால் ஒன்றியம் நிர்ணயிக்கிற அபராதத்தை ஒப்பந்தக்காரர் செலுத்த வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

60. உபரியாக பாலை வாகனத்தில் அனுப்பப்படுகிறபடியால் (லீக் அல்லவன்ஸ்) லீக்கான பாலை முகவர் / நிறுவனங்கள் போன்றோருக்கு விநியோகிக்க வாகன ஒப்பந்ததாரருக்க அனுமதியில்லை. அவ்வாறு வழங்கினால், குறைவாக பால் விநியோகிக்கப்பட்டதாக கருதி, அதற்குரிய இரட்டிப்பு தொகை அபராதமாக வாகன ஒப்பந்தக்காரரின் வாடகை பணத்தில் பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

61. 15 நாட்களுக்கு வாடகை கேட்பு பில் இருக்க வேண்டும். 16-ந் தேதி மற்றும் 1-ந்தேதி தவறாமல் வாடகை பில் கேட்பினை ஒன்றியத்திற்கு ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

62. வண்டியில் இன்டெண்ட்படி ஏற்றப்பட்ட பாலுக்கு அதிகமாக இருந்தாலோ வண்டியின் பிற பகுதிகளில் பால் பாக்கெட்டுகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தாலோ அதைக் கண்டு பிடிக்கும் பட்சத்தில் பாலின் இரட்டிப்பு கிரையத் தொகையுடன் ரூ.1000/- வரை (ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதத் தொகையாக வசூலிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

63. ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ள வாகனம் பழுதடைந்தாலோ / எப்.சி.க்கு சென்றாலோ அதற்குப் பதிலாக குளிர் பாதுகாப்பு செய்யப்பட்ட மாற்று வாகனம் இயக்கி பால் விநியோகம் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யாமல் குளிர் பாதுகாப்பு வசதி செய்யப்படாத வாகனம் இயக்கினால் பொது மேலாளருக்கு அபராத தொகை விதிக்க அதிகாரம் உண்டு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

64. ஒப்பந்தமளிக்கப்பட்ட வாகனம் இயக்கப்படாத நாட்களில் ஒன்றிய வாகனம் இயக்கப்பட்டால், ஒன்றியப் போக்குவரத்துப் பிரிவின் மூலம் நிர்ணயம் செய்யப்படும் வாடகை கட்டணத்தை ஒப்பந்தக்காரரின் கேட்பிணையில் அபாரதமாக பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கைபொய்ப்பம்**

65. பால் விநியோக பட்டியலில் (Schedule) தெரிவித்துள்ளபடி முகவருக்கு ஒப்பந்தக்காரர் பால் விநியோகம் செய்யப்பட வேண்டும். முகவர் தவிர்க்க முடியாத காரணங்களினால் பாலை திருப்பி அனுப்பினால் மேற்கண்ட திருப்பி அனுப்பிய பாலை உடனடியாக ஒன்றியத்தில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அதை மீறி ஒன்றியத்தில் சேர்க்காமல் தவறுகள் ஏற்படுமாயின் மேற்கண்ட திருப்பிய பாலின் அளவுகளின் கிரயத் தொகையில் இரட்டிப்பு தொகை மற்றும் அபராதத்துடன் பிடித்தம் செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

66. ஒப்பந்தக் காலத்தில் அல்லது ஒன்றியம் நிர்ணயம் செய்துள்ள காலக்கெடுவிற்குள், அரசு டீசலின் விலையை உயர்த்தி / குறைத்து நிர்ணயம் செய்யும் சூழல் நிலைகளில், போக்குவரத்து கட்டணம் சம்மந்தமாக பொது மேலாளர் அவர்கள் எடுக்கும் முடிவிற்கு ஒப்புக் கொள்கிறேன்.

மேற்படி டெண்டர் நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்று, புத்தி சுவாதீனத்துடனும் சுய நினைவுடனும் ஒப்புதல் அளிக்கிறேன்.

**ஒப்பந்ததாரர் கைபொய்ப்பம்**